# எந்த மவ்லவியாவது

# பிரகடனம் செய்யத் தயாரா?

அபூ அப்தில்லாஹ்

இன்று சுன்னத் ஜமாஅத் என்ற பெயரால் தர்கா, தரீக்கா, மத்புகளை ஆதரிக்கும் பரேல்வி கொள்கை மவ்லவிகள், தர்கா நீங்களாக தரீக்கா, மத்ஹபுகளை ஆதரிக்கும் தேவ்பந்த் கொள்கை மவ்லவிகள், அவர்களிலும் ஹனஃபி மவ்லவிகள், ஷாஃபி மவ்லவிகள், மாலிக்கி மவ்லவிகள், ஹன்பலி மவ்லவிகள், மத்ஹபுகளை மறுத்துத் தங்களை ஃகய்ர முகல்லிதுகள் என்று சொல்லும் அஹ்லஹதீஃத் மவ்லவிகள், முஜாஹித் மவ்லவிகள், ஸலஃபி மவ்லவிகள், ஸலஃபி மின்ஹஜ் மவ்லவிகள், 1987க்குப் பிறகுப் புதிதாகக் கற்பனைச் செய்யப்பட்ட மத்ஹபினரான ஜாக் மவ்லவிகள், தமுமுக மவ்லவிகள், ததஜ மவ்லவிகள், இதஜ மவ்லவிகள், ஊர் ஊருக்கு தனித்தனி தஜ மவ்லவிகள் இப்படி பல பல பிரிவுகளில் மவ்லவிகள் அறியப்படுகிறார்கள்.

இந்தப் பலதரப்பட்ட மவ்லவிகளில் எந்த ஒரு மவ்லவியாவது **“என்னை தக்லீது செய்யாதீர்கள். அதாவது கண்மூடிப் பின்பற்றாதீர்கள், நான் சொல்வது குர்ஆன், ஹதீஃத்படி இருந்தால் மட்டுமே எடுத்து நடங்கள், நான் சொல்வது குர்ஆன், ஹதீஃதுக்கு முரணாக இருந்தால் அதைச் சுவற்றில் எறிந்து விடுங்கள், குர்ஆன், ஹதீஃத் போதனைகளை மட்டுமே மார்க்கமாக எடுத்து நடங்கள். என்னை மட்டுமல்ல, வேறு எவரையும் தக்லீது செய்யாதீர்கள்”** என்ற பகிரங்கமாகப் பிரகடனம் செய்வதை யாராலும் காட்ட முடியமா? ஒருபோதும் முடியாது. குர்ஆன், ஹதீஃத் மட்டுமே மார்க்கம் என வாயளவில் பிதற்றும் மவ்லவி பீ.ஜைனுல் ஆபிதீன் 1986 ஏப்ரல் முதல் 1987 ஜூன் வரை அந்நஜாத்தின் ஆசிரியராக இருந்த கால கட்டத்தில் “அந்நஜாத்தையும் தக்லீது செய்யாதீர்கள்” என்று பின் அட்டையில் எழுதும்படி பலமுறை வற்புறுத்தியும் அவ்வாறு எழுத அவர் முன்வரவில்லை முதல் பக்கத்தில் அவரது பெயரைக் கொட்டை எழுத்தில் போட்டு வந்ததை மாற்றி அட்டையில் பின் பக்கத்தில் சிறிய எழுத்தில் போட்டதையே அவரால் ஜீரணிக்க முடியவில்லை. சுவரொட்டிகளில் கொட்டை எழுத்தில் பெயரைப் போடாதீர்கள் என்று சொல்லியதையும் அவர் ஏற்கவில்லை. அவர் சுயநலத்துடன் அந்நஜாத்தை விட்டு வெளியேறிய பின்னரே நாம் அவ்வாறு எழுதி வருகிறோம்.

அந்த அளவு இந்த மவ்லவிகள் பேர் புகழில் மக்களிடையே செல்வாக்குப் பெறுவதிலேயே குறியாக இருக்கிறார்கள். அந்த அளவு பெருமையையும், கண்ணியத்தையும் எதிர்பார்க்கிறார்கள். அல்லாஹ்வுக்கு மட்டுமே சொந்தமான பெருமையையும், கண்ணியத்தையும் இவர்கள் அபகரிக்க முற்படுவதால், நாளை மறுமையில் விசாரணையின் ஆரம்பத்திலேயே தலைகுப்புற இழுக்கப்பட்டு நரகில் எறியப்படுவதாக ஆதார பூர்வமான ஹதீஃத் கூறுகிறது. பார்க்க : முஸ்லிம் 3865; நஸயீ 3086; திர்மிதி 2304; அஹமத் 7928. இவ்வுலகை விரும்பி அதைப் பெற மக்களிடம் செல்வாக்கையும் பெருமையையும், கண்ணியத்தையும் எதிர்பார்த்து மக்களின் விருப்பப்படி செயல்படுவதால் 2:145 குர்ஆன் வசனம் கூறுவது போல் அக்கிரமக்காரர்களாகி நரகில் தலைகுப்புற எறியப்படும் நிலைக்கு ஆளாகிறார்கள். (பார்க்க 17:18, 39:72, 40:35)

மிக வேதனைக்குரிய பரிதாப நிலை இந்த மவ்லவிகளுக்கு ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணம் அவர்கள் மார்க்கத்தைப் பிழைப்பாகக் கொண்டதுவே. அதனால்தான் பெருமை பேசும் நிலைக்கு ஆளாகிறார்கள். இன்றைக்குச் சுமார் 1193வருடங்களுக்கு முன்னர் ஹிஜ்ரி 80க்கும் 241க்கும் இடைப்பட்டக் காலத்தில் வாழ்ந்து பெரும் மார்க்க சேவை செய்த மரியாதைக்குரிய அந்த நான்கு இமாம்களும் இவ்வாறு பிரகடனம் செய்துள்ளார்கள். அவர்களில் இறுதி நான்காவது இமாம் ஹம்பல்(ரஹ்) அவர்களது மறைவுக்குப் பிறகு சுமார் 200 ஆண்டுகள் கழித்து ஹிஜ்ரி 400 வாக்கில்தான் அந்நால்வரின் பெயரால், தங்களின் வயிற்றுப் பிழைப்பை நோக்கமாகக்கொண்டு எண்ணற்ற குர்ஆன் வசனங்களை நிராகரித்து வழிகெட்ட நான்கு மத்ஹபுகளைக் கற்பனை செய்தார்கள் இம் மவ்லவிகளின் முன்னோர்கள். அந்த நான்கு இமாம்களின் பகிரங்கப் பிரகடனத்தை 18.8.1985ல் நேர்வழி எது? என்ற தலைப்பில் அல்லாஹ் குர்ஆனில் கூறியுள்ள வசனங்கள், நபி(ஸல்) அவர்கள் கூறியவை, தாபியீன்கள்,

அல்லாஹ்வை விட நாங்களே விளக்கும் ஆற்றல் மிக்கவர்கள் என ஆணவம் பேசுகிறவர்களே!!

தபஅதாபியீன்கள், இமாம்கள் கூறியவை அனைத்தையும் வெளியிட்டிருந்தோம். அவை 1987ல் வெளியிட்ட முதல் பதிப்பான முஸ்லிம் சமுதாய சிந்தனைக்கு என்ற நூலிலும், அதையே இரண்டாம் பதிப்பாக 2010லும் வெளியிட்டிருந்தோம். அதில் காணப்படும் நான்கு இமாம்களின் பிரகடனங்களையும் அரபி மூலத்துடன் இங்கு பதிவு செய்துள்ளோம்; கவனமாகப் பார்வையிடுங்கள்.

**1. இமாம் அபூஹனீஃபா(ரஹ்) கூறுகிறார்கள்.**

إذا صح الحديث فهو مذهبي

ஹதீஸ் சஹீஹாக (ஆதாரப்பூர்வமாக) கிடைக்கும் போது அதை பின்பற்றுவதே என் கொள்கையாகும். *ஆதாரம்: ஹாஷியா இப்னு ஆபிதீன், பாகம் 1, பக்கம் 63, ரஸ்முல் முப்தீ பாகம் 1, பக்கம் 4, ஈகாழுல் ஹிமம் பக்கம் 62*

لا يحل لأحد أن يأخذ بقولنا ما لم يعلم من أين أخذناه

“எந்த ஆதாரத்தின் அடிப்படையில் நாம் முடிவு செய்தோம் என்பதை அறியாமல் எங்கள் சொல்லை எடுத்து நடப்பது எவருக்கும் ஹலால் இல்லை.” *ஆதாரம்: அல்இன்திகா பக்கம் 145, ஹாஷியா இப்னு ஆபீதின் பாகம் 6, பக்கம் 293, ரஸ்முல் முஃப்தீ, பக்கம் 29, 32.*

وفي رواية حرام على من لم يعرف دليلي أن يفتي بكلامي

என்னுடைய ஆதாரத்தை அறியாதவன் என் சொல்லைக் கொண்டு ஃபத்வா கொடுப்பது ஹராமாகும். *ஆதாரம்:மீஸான்ஷஃரானி,பாகம்1,பக்கம்55*

زاد في رواية فإننا بشر نقول القول اليوم ونرجع عنه غداً

நாங்கள் இன்று ஒரு சொல்லைச் சொல்லி விட்டு, நாளை அதிலிருந்து பின்வாங்கி அதனை திரும்பப் பெற்றுக் கொள்கின்ற மனிதர்களே. *ஆதாரம்: மீஸான் ஷஃரானி, பாகம் 1, பக்கம்55*

وفي أخرى ويحك يا يعقوب (هو أبو يوسف) لا تكتب كل ما تسمع مني فإني قد أرى الرأي اليوم وأتركه غداً وأرى الرأي غداً وأتركه بعد غد

அபூ யூசுஃபே! என்னிடமிருந்து கேட்டவற்றை எல்லாம் எழுதி வைத்து விடாதே; ஏனெனில் இன்று ஒரு அபிப்பிராயத்தைக் கொண்டு (ஒரு தீர்ப்பு அளிப்பேன்) நாளை அதை விட்டு விடுவேன். நாளை ஒரு அபிப்பிராயம் கொண்டு (தீர்ப்பு அளிப்பேன்) நாளை மறுநாள் அதை (தீர்ப்பு அளித்ததை) விட்டுவிடுவேன். *ஆதாரம் இமாம் இப்னு முயீனுடைய ‘தாரிக்’, பாகம் 6, பக்கம் 71.*

إذا قلت قولاً يخالف كتاب الله تعالى وخبر الرسول ﷺ فاتركوا قولي

அல்லாஹ்வுடைய நெறிநூலுக்கும் நபி(ஸல்) அவர்களின் சொல்லுக்கும் மாற்றமான ஒன்றை நான் சொன்னால், என் சொல்லை விட்டுவிடுங்கள்! *ஆதாரம்: ஈகாழுல் ஹிமம், பக்கம் : 50.*

**2.இமாம் மாலிக்(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:**

إنما أنا بشر أخطيء وأصيب فانظروا في رأيي فكل ما وافق الكتاب والسنة فخذوه وكل ما لم يوافق الكتاب والسنة فاتركوه

1. நான் (சில நேரங்களில்) சரியாகவும், (சில நேரங்களில்) தவறாகவும் முடிவெடுக்கக் கூடிய ஒரு மனிதனே. என் முடிவுகளை நீங்களும் ஆராயுங்கள்! குர்ஆனுக்கும், நபி வழிக்கும் பொருத்தமானவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்! குர்ஆனுக்கும், நபிவழிக்கும் பொருத்தமில்லாதவற்றை விட்டு விடுங்கள். *ஆதாரம்: ஜாமிவு இப்னு அப்துல்பர், பாகம்2, பக்கம் 42, உஸுூதுல் அஹ்காம், பாகம் 6, பக்கம் 149, ஈகாழுல் ஹிமம், பக்கம் 62*

ليس أحدٌ بعد النبي ﷺ إلا ويؤخذ من قوله ويترك إلا النبي

2. நபி(ஸல்) அவர்களின் சொல்லைத் தவிர வேறு எவரது சொற்களிலும், எடுக்கத் தக்கவைகளும் உண்டு. விடப்படக் கூடியவைகளும் உண்டு. நபி(ஸல்) அவர்கள் சொல் மட்டுமே முற்றாக ஏற்கப்பட வேண்டியவை. *ஆதாரம்: இர்ஷாதுஸ்ஸாலிக் பாகம் 1, பக்கம் 227, ஜாமிவு இப்னு அப்துல்பர், பாகம்2, பக்கம் 91, உஸூலுல் அஹ்காம், பாகம் 6, பக்கம் 145.*

(இதே வார்த்தையை இப்னு அப்பாஸ்(ரழி) அவர்கள் கூறியதாக, இமாம் தகியுத்தின் சுபுக்கீ அவர்கள் தனது ‘பதாவாவில் பாகம் 1, பக்கம் 148ல் குறிப்பிடுகிறார்கள்).

قال ابن وهب سمعت مالكاً سئل عن تخليل أصابع الرجلين في الوضوء؟ فقال ليس ذلك على الناس قال فتركته حتى خف الناس فقلت له عندنا في ذلك سنة فقال وما هي؟ قلت حدثنا الليث بن سعد وابن لهيعة وعمرو بن الحارث عن يزيد بن عمرو المعافري عن أبي عبدالرحمن الحبلي عن المستورد بن شداد القرشي قال رأيت رسول الله ﷺ يدلك بخنصره ما بين أصابع رجليه فقال إن هذا الحديث حسن وما سمعت به قط إلا الساعة ثم سمعته بعد ذلك يسأل فيأمر بتخليل الأصابع

அல்ஹதீஸ் உங்களுக்கு விளங்காது; நாங்களே விளக்குகிறோம் என்று கூறும் மவ்லவிகள்!

3. "ஒளூ செய்யும் போது கால் விரல்களைக் கோதிக் கழுவ வேண்டியதில்லை'' என்ற கருத்தை இமாம் மாலிக் அவர்கள் கொண்டிருந் தார்கள். அப்போது நான் "கால்களைக் கோதிக் கழுவ வேண்டும்'' என்று ஹதீஸ் உள்ளதாகக் கூறி அவர்களிடம் ஸனதுடன் அறிவித்தேன். அதற்கு இமாம் மாலிக் அவர்கள், "இது சரியான ஹதீஸ்தான். நான் இதுவரை கேள்விப்பட்ட தில்லை'' என்று கூறிவிட்டு, அதன்பின் கால் விரல்களையும் கோதிக்கழுவிட ஆணையிட் டார்கள் என்று இப்னு வஹ்ப்(ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள். *ஆதாரம்: அல்ஜர்ஹு வல்தஃதீல் முன்னுரை, பக்கம் 31,32.*

**3.இமாம் ஷாஃபிஈ(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.**

ما من أحد إلا وتذهب عليه سنة لرسول الله ﷺ وتعزب
عنه فمهما قلت من قول أو أصلت من أصل فيه عن
رسول الله ﷺ خلاف ما قلت فالقول ما قال
رسول الله ﷺ وهو قولي

1. எவராக இருந்தாலும் அவரை விட்டும் ரசூல்(ஸல்) அவர்களின் வழிமுறைகளில் ஏதே னும் (சில) தவறி விடத்தான் செய்யும். நான் ஏதேனும் ஒரு சொல்லைச் சொல்லும் போது, அல்லது ஏதேனும் ஒரு அடிப்படையை வகுத் துத் தரும்போது, அல்லாஹ்வின் திருத்தூதரு டைய கூற்றுக்கு மாற்றமாக அது இருந்தால், ரசூல்(ஸல்) அவர்களின் கூற்றே ஏற்கப்பட வேண்டும்! ரசூல்(ஸல்) அவர்கள் கூற்றை ஏற் பதே என் கொள்கையுமாகும். *ஆதாரம்: தாரீகு திமிஷ்க் இப்னு அஸாகிர் பாகம் 3, பக்கம் 15, ஈகாழுல் ஹிமம் பக்கம் : 100.*

أجمع المسلمون على أن من استبان له سنة عن
رسول الله ﷺ لم يحل له أن يدعها لقول أحد

2. ரசூல்(ஸல்) அவர்களின் வழிமுறை எவருக் குத் தெரிகின்றதோ, அதை எவருடைய கருத்துக் காகவும் விடுவது ஹலால் இல்லை என்று முஸ் லிம்கள் அனைவரும் 'இஜ்மாவு' செய்துள்ளனர். *ஆதாரம்: ஈகாழுல் ஹிமம் பக்கம் 68*

إذا وجدتم في كتابي خلاف سنة رسول الله ﷺ فقولوا
بسنة رسول الله ﷺ ودعوا ما قلت (وفي رواية) فاتبعو
ها ولا تلتفتوا إلى قول أحد

3. எனது நூலில் நபி(ஸல்) அவர்களின் சுன்னத்துக்கு மாற்றமானதைக் கண்டால் ரசூலுடைய சுன்னத்தையே (மக்களிடம்) சொல்லுங்கள்; என் கூற்றை விட்டுவிடுங்கள். *ஆதாரம் : அல்மஜ்மூவு (நவவீ) பாகம் 1, பக்கம்63, இப்னு அஸாகிர், (9,10,15), ஈகாழுல் ஹிமம் பக்கம் 706, தம்முல் கலாம் 1,3,47, அல்இஹ்திஜாஜ் பாகம் 2*

إذا صح الحديث فهو مذهبي

4. ஆதாரப்பூர்வமான ஹதீஸ் இருக்கும் போது அதைப் பின்பற்றுவதே எனது கொள்கை. *ஆதாரம்: அல்மஹ்மூவு (நவவீ) பாகம் 1, பாகம்63, மீஸான் ஷஃரானி பாகம் 1, பக்கம் 57, ஈகாழுல் ஹிமம் பக்கம் 107*

أنتم أعلم بالحديث والرجال مني فإذا كان الحديث
الصحيح فأعلموني به أي شيء يكون كوفياً أو بصرياً
أو شامياً

(இதை நான்கு இமாம்களும் கூறியதாக இமாம் இப்னு ஹஸ்மு அவர்களின் கூற்றை இமாம் ஷஃரானி பாகம் 1, பக்கம் 57ல் குறிப்பி டுகிறார்கள்).

5. இமாம் அஹ்மது இப்னு ஹன்பலை நோக்கி இமாம் ஷாஃபிஈ(ரஹ்) கூறுகிறார்கள்.

"ஹதீஸ்களையும், அதன் அறிவிப்பாளர்க ளையும் நீங்கள் நன்கு அறிந்து வைத்துள்ளீர் கள்! ஆதாரப்பூர்வமான ஹதீஸ் என்றால் உடனே அதை எனக்கு அறிவித்து விடுங்கள்!'' *ஆதாரம்: ஆதாபுஷ் ஷாஃபியி, பக்கம் 94,95, அபூயீமின் ஹில்யா பாகம் 9, பக்கம் 106, இப்னுல் ஜவ்ஸியின் 'மனா கிபுல் இமாம் அஹமத்" பக்கம் 499, 'அல் இன் திகா' பக்கம் 75*

كل مسألة صح فيها الخبر عن رسول الله ﷺ عند أهل
النقل خلاف ما قلت فأنا راجع عنها في حياتي وبعد موتي

நபி(ஸல்) அவர்களின் ஆதாரப்பூர்வமான ஹதீஸ்கள் மூலம் வந்துள்ள சட்டங்களுக்கு மாற்றமாக நான் சொன்ன அத்தனைச் சட்டங் களிலிருந்தும் நான் வாழும் போதும் விலகிக் கொண்டேன். எனது மரணத்திற்குப் பின்னும் நான் விலகிவிட்டேன். (நான் இதற்குப் பொறுப்பேற்க இயலாது) *ஆதாரம்: ஹில்யா (அபூநயீம்) பாகம் 9, பக்கம் 107, இஃலாமுல் மூகியின், பாகம் 2, பக்கம் 363, ஈகாழுல் ஹிமம் பக்கம் 104.*

إذا رأيتموني أقول قولاً وقد صحّ عن النبي ﷺ خلافه
فاعلموا أن عقلي قد ذهب

**நபி(ஸல்) அவர்களைவிட நாங்களே விளக்கும் ஆற்றல் மிக்கவர்கள் என அகந்தை பேசுகிறவர்களே!**

*நான் எதையாவது சொல்லி அது நபி(ஸல்) அவர்கள் கூற்றுக்கு மாற்றமாக இருப்பின், என் அறிவுக்குறைவைப் புரிந்து கொள்ளுங்கள்.* *ஆதாரம்: இப்னு அஸாகிர் 1,10,15 அல்ஆதாப் இப்னு அபீஹாதம்) பக்கம் 93, அபூநயீம், பாகம் 9, பக்கம் 106.*

كل ما قلت؟ فكان عن النبي ﷺ خلاف قولي مما يصح فحديث النبي أولى فلا تقلدوني

*நான் சொன்ன சொற்கள் ஆதாரப்பூர்வமான நபி மொழிக்கு முரண்படும் போது, நபியின் ஹதீஸ்தான் ஏற்கத்தக்கது. என்னைப் பின்பற்றாதீர்கள்.* *ஆதாரம்: அல்ஆகாப் (இப்னு அபிஹாதம்) பக்கம் 93, அபூநயீம் பாகம் 9, பக்கம் 106.*

كل حديث عن النبي ﷺ فهو قولي وإن لم تسمعوه مني

*நபி(ஸல்) அவர்கள் வாயிலாக வந்துள்ள எல்லா ஹதீஸ்களும் தான் என் சொல்லாகும். என் மூலம் நீங்கள் அதைச் செவியுறாவிட்டாலும் (அதையே நான் சொன்னதாகக் கருதிக் கொள்ளுங்கள்.)*

*அல்ஆதாப் (இப்னு அபீஹாதம்) பக்கம் 93, 94*

**4. இமாம் அஹ்மது இப்னு ஹன்பல்(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.**

لا تقلدني ولا تقلد مالكا ولا الشافعي ولا الأوزاعي ولا الثوري وخذ من حيث أخذوا

*என்னையோ, மாலிக், ஷாஃபியீ, அவ்ஸாயீ, ஸவ்ரீ போன்ற (இமாம்களையோ) பின்பற்றாதே. அவர்கள் எதிலிருந்து புரிந்து கொண்டார்களோ (அந்த குர்ஆன் ஹதீஸிலிருந்து நீயும் புரிந்து கொள்).* *ஆதாரம்: ஈகாமுல் ஹிமம், பக்கம் 113.*

رأي الأوزاعي ورأي مالك ورأي أبي حنيفة كله رأي وهو عندي سواء وإنما الحجة في الآثار

*இமாம் அபூஹனீஃபா, இமாம் மாலிக், இமாம் அவ்ஸாயீ ஆகியோரின் கருத்துக்கள் அவர்களின் அபிப்பிராயமே. உண்மையான ஆதாரம் நபித்தோழர்களின் வழியில்தான் உண்டு. ஜாமிவு இப்னு அப்துல்பர், பாகம் 2, பக்கம்149*

من رد حديث رسول الله ﷺ فهو على شفا هلكة

*நபி(ஸல்) அவர்களின் ஹதீஸை நிராகரிப்பவன் அழிவின் விளிம்பிலேயே இருக்கின்றான்.*

*ஆதாரம் : இப்னுல் ஜவ்ஸி, பக்கம் 182*

*இப்படிப் பகிரங்கமாகப் பிரகடனம் செய்யும் துணிச்சல் இந்த நான்கு இமாம்களுக்கு எதனால் ஏற்பட்டது. ஆம்! அவர்கள் மார்க்கத்தைப் பிழைப்பாக்கவில்லை. மார்க்கத்தை மதமாக்கி அது கொண்டு வயிறு வளர்க்கவில்லை. எனவே அவர்களால் துணிந்து அச்சமின்றி மக்களிடம் பேர் புகழை எதிர்பாராமல் சத்தியத்தை குர்ஆன், ஹதீஃதில் உள்ளது உள்ளபடி சொல்லும் துணிச்சல் இருந்தது.*

*ஆனால் ஹிஜ்ரி 400க்குப் பிறகு மரியாதைக்குரிய அந்த நான்கு இமாம்களின் பெயரால் கற்பனையாக மத்ஹபுகளை ஏற்படுத்திக் கொண்டவர்கள் மார்க்கத்தை மதமாக்கி அதையே வயிற்றுப் பிழைப்பாகக் கொண்டுள்ளதால், அந்த வழி முறையை அப்படியே பின்பற்றும் இன்றைய மவ்லவிகளுக்கும் குர்ஆனில், ஹதீஃதில் உள்ளதை உள்ளபடி மக்களுக்கு எடுத்துச் சொல்லும் துணிச்சல் இல்லை. அப்படிச் சொன்னால் அவர்களின் வயிற்றுப் பிழைப்புக்கு ஆபத்து வந்துவிடும். எனவேதான் நாம் ஆரம்பத்தில் எழுதியுள்ளவாறு பகிரங்கமாகப் பிரகடனப் படுத்தும் அசாத்தியத் துணிச்சல் இந்த அனைத்துப் பிரிவு மவ்லவிகளுக்கும் ஏற்படும் வாய்ப்பு அறவே இல்லை என்று உறுதியாகச் சொல்கிறோம். இந்த உண்மையை இந்த இதழில் காணப்படும் "புரோகிதரிசம்" என்ற கட்டுரையில் காணப்படும் குர்ஆன் வசனங்களை நீங்களே நேரடியாகப் படித்துச் சிந்தித்து விளங்கிக் கொள்ள முடியும். அல்லாஹ் அருள்புரிவானாக.*

*மிகமிகத் தெளிவாகவும் உறுதியாகவும் சொல்கிறோம். அல்குர்ஆனின் எண்ணற்ற வசனங்கள் மார்க்கத்தை மதமாக்கி அதையே வயிற்றுப் பிழைப்பாகக் கொள்வதை விட மிக மிகக் கொடிய ஹராம் வேறு ஒன்று இல்லை. அல்குர்ஆனில் ஹராமாக்கப்பட்ட இதர அனைத்து ஹராம்களையும் ஒன்று சேர்த்துப் பார்த்தாலும் அவற்றை விடக் கொடிய ஹராம் மார்க்கத்தைப் பிழைப்பாகக் கொள்வதாகும். இன்று முஸ்லிம்கள் மட்டுமல்ல, இவ்வுலகமே அழிவின் அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடப்பதற்கும், அனைத்து வகை வழிகேடுகளும் கொடிகட்டிப் பறப்பதற்கும் நாளை மறுமையில் அல்லாஹ்விடம் பதில் சொல்லும் கட்டாயத்தில் தான் இந்த அனைத்துத் தரப்பு மவ்லவிகளும் இருக்கிறார்கள்.*

2:186, 7:3, 33:36,66,67,68, 50:16 இறைக் கட்டளைகள்படி மவ்லவிகள் அல்லாஹ்வுக்கும்